தினமணி

**மண் வளம் பெருக பசுந்தாள் உரங்கள்**

First Published : 09 Jun 2011 02:59:02 AM IST

கடலூர்: நாட்டின் மக்கள் தொகை பெருக்கம் காரணமாக, உணவுப் பொருள்களின் தேவை அதிகரித்து வருகிறது.

÷ஆனால் வேளாண் நிலங்கள் வீட்டு மனைகளாகவும், தொழிற்சாலைகளாகவும் மாற்றப்படுவது வேகமாக நடந்து வருகிறது. இதனால் குறைந்த நிலத்தில் சாகுபடி செய்து, நிறைந்த மகசூலைப் பெற வேண்டிய கட்டாயம் தமிழகத்தில் உருவாகிக் கொண்டு வருகிறது.

÷இதற்காக பசுமைப் புரட்சி என்ற பெயரில் அதிகப்படியான ரசாயன உரங்களையும், கடுமையான நச்சுத் தன்மை கொண்ட பூச்சிக் கொல்லி மருந்துகளையும், வேளாண் துறையின் பரிந்துரையின் பேரில், விவசாயிகள் பயன்படுத்தத் தொடங்கினர். அதன் விளைவாக இன்று மக்கள் சாப்பிடும் உணவே, விஷமாக மாறியிருக்கிறது.

÷இயற்கை வேளாண்மையை என்று புறக்கணித்தோமோ அன்றே மக்களின் ஆரோக்கியமும் புறக்கணிக்கப்பட்டு விட்டது. மீண்டும் மனிதன் மருத்துவர்களை நாடி, கடுமையான பக்க விளைவுகளைக் கொண்ட மருந்துகளைச் சாப்பிட்டு நிரந்தர நோயாளிகளாகி விடுகிறான். எனவே அடுத்த தலைமுறையாவது ஆரோக்கியத்துடன் வாழ, மீண்டும் மனிதன் இயற்கை வேளாண்மைக்கும் திரும்பியாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறான். இதனால் வேளாண் துறையும் இயற்கை உரங்களை விவசாயிகளுக்குப் பரிந்துரைத்து வருகிறது.

÷இயற்கை வேளாண்மையின் அடிப்படை பசுந்தாள் உரங்கள். பசுந்தாள் உரங்களைப் பயன்படுத்துவதால், மண் அமைப்பு மேம்படும். மண்ணில் நீர்ப் பிடிப்பை அதிகரிக்கும். மண் அரிப்பினால் ஏற்படும் இழப்பை குறைக்கும். பசுந்தாள் உரங்கள் என்பது பசுமையன சிதைக்கப்படாத பொருள்களை உரமாகப் பயன்படுத்துவது. இதை இருவழிகளில் பெறலாம். பசுந்தாள் பயிர்களை வளர்த்தும், இயற்கையாக காடுகளில் வயல் வரப்புகளில், தரிசு நிலங்களில் கிடைக்கும் செடிகள் மூலமாகவும் பெறலாம்.

÷வளர்க்கப்படும் முக்கியமான பசுந்தாள் உரப் பயிர்கள் சணப்பு, தக்கைப்பூண்டு, கொளுஞ்சி, பில்லிப் பயறு, கொத்தவரை, சீமை அகத்தி ஆகியவை. பசுந்தாள் உரங்கள் ஏக்கருக்கு 25 முதல் 45 கிலோ வரை தழைச் சத்தை மண்ணுக்கு அளிக்கிறது. சணப்பில் 2.3 சதவீதம் தழைச்சத்து, 0.50 சதவீதம் மணிச்சத்து, 1.80 சதவீதம் சாம்பல் சத்து கிடைக்கிறது. தக்கைப் பூண்டில் 3.5 சதவீதம்

தழைச்சத்து, 0.60 சதவீதம் மணிச்சத்து, 1.20 சதவீதம் சாம்பல் சத்து கிடைக்கிறது. அகத்தியில் 2.71 சதவீதம் தழைச்சத்து, 0.53 சதவீதம் மணிச்சத்து, 2.21 சதவீதம் சாம்பல் சத்தும் கிடைக்கிறது.

÷பசுந்தாள் உரங்கள் மண்ணில் கனிமப் பொருள்களின் அளவை அதிகரிக்கிறது. மண்ணில் நுண்ணுயிர்கள் பெருகி, அவற்றின் செயல் திறன் ஊக்குவிக்கப்படுகிறது. தக்கைப் பூண்டு போன்றவை, களர் நிலத்தை சீரமைக்கும் தன்மை கொண்டது. நெர் பயிருக்குப் பசுந்தாள் உரம் இடுவதால், மகசூல் 15 முதல் 20 சதவீதம் வரை அதிகரிக்கும். பசுந்தாள் உரங்கள் மக்கும்போது உருவாகும் அங்கக அமிலங்கள், நிலத்தில் உள்ள பாஸ்பேட்டுகளை விடுவித்து, பயிருக்குப் பயன்படும் நிலைக்கு மாற்றி விடுகிறது.

÷சணப்பு (குரோட்டலேரியா ஜன்சியா) எல்லா வகை மண்ணுக்கும் ஏற்றது. ஏக்ருக்கு 10 முதல் 15 கிலோ விதை தேவைப்படும். தண்ணீர் அதிகம் தேவைப்படாது. தண்ணீர் பாய்ச்சும்போது செழிப்பாக வளரும். விதைத்த 25 முதல் 45-வது நாளில் பூக்க ஆரம்பித்ததும், வயலில் மடக்கி உழ வேண்டும். ஏக்கருக்கு 3 முதல் 5 டன்கள் வரை பசுந்தாள் உரம் கிடைக்கும். தக்கைப் பூண்டு (செஸ்பேனியா அக்குலேட்டா) களிமண், களர் மண், உவர் நிலம், நீர் தேங்கும் நிலம் போன்றவற்றில் வளரக் கூடியது. ஏக்கருக்கு 10 முதல் 15 கிலோ வரை விதை தேவைப்படும். 4.5 முதல் 8 டன்கள் வரை பசுந்தாள் கிடைக்கும்.

÷பசுந்தாள் உர விதைகளை நிலத்தை நன்றாக புழுதியாக்கி பின்னர் விதைக்க வேண்டும். 2 அல்லது 3 முறை தண்ணீர் பாய்ச்சினால் நன்றாகச் செழித்து வளரும். வளர்ச்சி மற்றும் தழைச்சத்து நிலைப்படுத்தும் தன்மை டி.எஸ்.ஆர்-1 ரகத்தில் மற்ற ரகங்களை விட அதிகமாக இருக்கும் என்று வேளாண் துறை தெரிவிக்கிறது. மேலும் விவரங்களுக்கு விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் துறை அலுவலர்களை அணுகிப் பெற்றுக் கொள்ளலாம்.

**ஆரோக்கியமான மிளகாய் நாற்றுகளைப் பெற...**

First Published : 09 Jun 2011 02:56:21 AM IST



ஈரோடு: வீரிய ஒட்டு ரக மிளகாயை பயிரிட்டாலும் ஆரோக்கியமான நாற்றுகளை உற்பத்தி செய்து நடவு செய்வதன் மூலமே நல்ல மகசூல் பெற முடியும்.

மேட்டுப்பாத்தி நாற்றங்கால்: பாத்திகளை ஓரளவு நிழல்படியும் படியான இடத்தில் 10-15 செ.மீ. உயரத்தில் தயாரிக்க வேண்டும். அதன் அகலம் 1 மீட்டர், நீளம் 3 மீட்டர் வரை அமைக்கலாம். மண் மிருதுவாகவும், ஈரம் காக்கும் தன்மையுடையதாகவும் இருக்க வேண்டும். இதற்காக மண்ணின் தன்மையைப் பொறுத்து குறுமண், மணல் ஆகியவற்றை கலக்க வேண்டும். நன்கு பண்படுத்திய ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு 20 கிலோ மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் சேர்க்க வேண்டும். ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு இரண்டு கிலோ டிஏபி உரம் இடுவதால் நாற்றுகள் ஊட்டத்துடன் வளர்கின்றன.

நாற்றுகளை பிடுங்கும் போது வேர் அறுபடாமல் இருக்கும். நாற்றங்காலில் நூற்புழு, இளம்பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுபடுத்த ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு 250 கிராம் வீதம் பீயுரிடான் குருணைகளை இட வேண்டும். அழுகல் நோய் வராமல் தடுக்க ஒரு சத வீரியமுள்ள போர்டா கலவையால் மண்ணை நேர்த்தி செய்ய வேண்டும்.

மேட்டுப்பாத்தியின் மேற்பரப்பை மரப்பலகையால் சமப்படுத்த வேண்டும். அதில் 10 செ.மீ. இடைவெளியில் 1.2 செ.மீ. ஆழத்துக்கு கோடுகள் போட்டு, அந்தக் கோடுகளில் விதை நேர்த்தி செய்த விதைகளை, பரவலாக, சீரான இடைவெளியில் விதைக்க வேண்டும். அடர்த்தியாக விதைப்பது அழுகல் நோயை உண்டாக்கும். மேலும் நாற்றுகள் மெலிந்து காணப்படும்.

விதைக்கும் ஆழம் விதைகளின் விட்டத்தை விட 3-4 மடங்கு அதிகம் இருக்க வேண்டும். விதைகளை மணல் அல்லது நாற்றங்கால் மண் கொண்டு மூடிவிட்டு பூவாளியால் நீர் பாய்ச்ச வேண்டும். பின் வைக்கோல் அல்லது உலர்ந்த இலைகளை பாத்திகளின் மேல் பரப்ப வேண்டும். விதைத்து 10 முதல் 15 நாள்கள் கழித்து பாத்திகளின் மேல் பரப்பிய வைக்கோல் அல்லது இலைகளை அகற்றி விட வேண்டும். தினமும் பூவாளி கொண்டு காலை, மாலை நேரங்களில் நீர் ஊற்றுவது நாற்றுகள் நல்ல வளர்ச்சி அடைவதற்கும், விதைகள் நாற்றங்காலை விட்டு வெளியே வராமல் இருப்பதற்கும் உதவுகிறது.

நாற்றங்காலில் வேர் அழுகல் நோயைக் கட்டுபடுத்த பதினைந்து நாள்கள் இடைவெளியில் காப்பர் ஆக்ஸிகுளோரைடு அல்லது புளுகாப்பர் 2.5 கிராம் மருந்தை 1 லிட்டர் நீரில் கரைத்து ஊற்ற வேண்டும். நடவுக்காக நாற்று பிடுங்குவதற்கு 12 மணி நேரத்துக்கு முன்பே மேட்டுப்பாத்திகள் நன்கு மூழ்கும் அளவுக்கு நீர் பாய்ச்ச வேண்டும். குழித்தட்டு நாற்றங்கால்: நாற்றுகள் நல்ல வாளிப்பாகவும் முழுமையான வேர்களுடனும் கிடைக்க புரோடிரே எனப்படும் குழித்தட்டு நாற்று அட்டைகள் உதவுகின்றன. இம்முறையில் நன்கு மக்கிய தென்னை நார்க்கழிவை வளர் ஊடகமாக பயன்படுத்தி பூச்சிகள் புகாத நிழல் வலைக் கூடாரங்களில் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இம்முறையைப் பயன்படுத்தி பருவமற்ற காலங்களிலும் நாற்றுகளை உற்பத்தி செய்யமுடியும். குழித்தட்டுகளில் நாற்றுகள் உற்பத்தி செய்யும் போது வழக்கமான முறையை விட விதையளவு 30-40 சதவீதம் குறைவாக தேவைப்படும். பாதுகாப்பான சூழலில் நாற்றுகள் வளர்க்கப்படுவதால்

பூச்சி, நோய்களின் தாக்குதல்களை கண்காணிப்பது எளிது. மேலும் விவரங்களை பெற தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை அலுவலகத்தை அணுகலாம்.

**23 சதவீத தேயிலை தூள் தேக்கம்**

First Published : 08 Jun 2011 10:26:02 AM IST

குன்னூர், ஜூன் 7: குன்னூர் ஏலமையத்தில் விற்பனையாகாமல் 23 சதவீதத் தேயிலை தூள் தேக்கமடைந்துள்ளது. இதன் மதிப்பு சுமார் 2 கோடி.

÷குன்னூரில் உள்ள தேயிலை ஏல மையத்தில் ஒவ்வொரு வாரமும் தேயிலைத் தூள் ஏலம் நடக்கிறது. இந்த வாரத்திற்கான ஏலத்தில் மொத்தம் 16 லட்சத்து ஆயிரம் கிலோ தேயிலை கொண்டு வரப்பட்டது. இதில் 11 லட்சத்து 66 ஆயிரம் கிலோ இலை ரகங்களும், 4 லட்சத்து 45 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகங்களும் ஆகும்.

÷உள் நாட்டு விற்பனை ஓரளவு இருந்தாலும் வெளி நாட்டு ஏற்றுமதியாளர்களில் பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாட்டு வர்த்தகர்கள் கணிசமான அளவு மட்டும் கொள்முதல் செய்தனர். அதிக அளவு தேவையில்லாததால் விலை ரூ.3 வரை குறைந்தே காணப்பட்டது. டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.40 முதல் ரூ.44 வரையிலும், நல்ல தூள் ரூ.89 முதல் ரூ.130 வரையிலும் ஏலம் போனது.

÷இதில் சுமார் 23 சதம் தேயிலை ஏலம் போகவில்லை. ஏலம் போகாமல் தேங்கிய தேயிலையின் மதிப்பு சுமார் ரூ.2 கோடி.

**17-ல் விவசாயிகள் குறைதீர்ப்பு நாள்**

First Published : 08 Jun 2011 10:26:11 AM IST

உதகை, ஜூன் 7: உதகையில் வரும் 17-ம் தேதி நடைபெறவுள்ள விவசாயிகள் குறை தீர்ப்பு நாள் கூட்டத்திற்கான கோரிக்கைகள் ஏதேனும் இருப்பின் உடனடியாக அவற்றை அனுப்பி வைக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

÷இதுதொடர்பாக நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் ஹால்துரை தெரிவித்தது: நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 17-ம் தேதி காலையில் உதகை மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

÷நீலகிரி மாவட்ட விவசாயிகள் விவசாயம் தொடர்பான தங்களது குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை தோட்டக்கலை இணை இயக்குநர், தபால் பெட்டி எண் 72, உதகை-1 என்ற முகவரிக்கு தபாலிலோ0 அல்லது நேரிலோ கிடைக்குமாறு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

விவசாயிகள் தங்களது பொதுவான கோரிக்கைகளை தவிர்த்து விவசாயம் தொடர்பான பிரச்னைகளையும், நீர்ப்பாசனம், இடுபொருட்கள் போன்ற கோரிக்கைகளை மட்டும் அனுப்பி வைக்க வேண்டுமெனவும் ஹால்துரை தெரிவித்துள்ளார்.

**சம்பு விதைப் பஞ்சால் பெரும் பாதிப்பு: சுகாதாரத் துறை அதிகாரிகள் ஆய்வு**

First Published : 08 Jun 2011 10:32:03 AM IST

வெள்ளக்கோவில், ஜூன் 7: வெள்ளக்கோவில் நகரில் சம்பு விதைப் பஞ்சு காற்றில் பறப்பதால் ஏற்பட்டு வரும் பாதிப்பு குறித்து சுகாதாரத் துறை அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தனர்.

நகரின் தாராபுரம் சாலைப் பிரிவுக்கு மேல்புறம் தனியாருக்குச் சொந்தமான பல ஏக்கர் காலியிடத்தில் வளர்ந்துள்ள சம்பு பயிரின் விதைகளிலிருந்து காற்றில் பறக்கும் ஒருவித பஞ்சு போன்ற பொருளால் மிகவும் பாதிப்பு ஏற்பட்டு வந்தது.

இதுகுறித்து "தினமணி'யில் செய்தி வெளியானது. இதையடுத்து தாராபுரம் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் பிச்சை, வட்டார சுகாதார ஆய்வாளர் ரங்கசாமி, சுகாதார அலுவலர் ரவி, நகராட்சி சுகாதார மேற்பார்வையாளர் சரவணன் உள்ளிட்டோர் சம்பவ இடத்தை ஆய்வு செய்து பாதிப்பை உறுதி செய்தனர்.

இப் பகுதியில் பாம்புகள் நடமாட்டமும் இருப்பதாக பொதுமக்கள் தெரிவித்தனர். சம்பவ இடத்தில் பரவிக் கிடக்கும் புதர்கள் மற்றும் சம்பு பயிர்களை அப்புறப்படுத்த இடத்தின் உரிமையாளர்கள் ஒப்புக்கொண்டதால் இப் பிரச்னை விரைவில் முடிவுக்கு வரும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினமலர்

## பூட்டிக் கிடக்கும் வேளாண்மை விரிவாக்க மையம் மீண்டும் செயல்படுமா?

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2011,00:54 IST

பொன்னேரி : உரிய பராமரிப்பு இன்றி பூட்டி கிடக்கும், வேளாண்மை விரிவாக்க மையம், மீண்டும் அதே இடத்தில் செயல்பட வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். பொன்னேரி மற்றும் அதன் சுற்றுப்புறங்களில், 200க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்கு, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் விவசாயத்தையே நம்பியுள்ளனர். விவசாயிகளின் வசதிக்காக, பொன்னேரி அடுத்த சின்னகாவணம் பகுதியில், வட்டார வேளாண்மை விரிவாக்கம் மையம் செயல்பட்டு வந்தது. அந்த மையத்தின் மூலம், அங்குள்ள வேளாண்மை அலுவலர்கள் விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகளையும், புதிய தொழில் நுட்பங்களையும் அவ்வப்போது தெரிவித்து வந்தனர். மழையால் பாதிக்கப்படும் விளைநிலங்கள் குறித்து கணக்கெடுக்கும் பணியிலும் ஈடுபட்டனர். இந்நிலையில், சில மாதங்களுக்கு முன், பொன்னேரியில் செயல்பட்டு வந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், மீஞ்சூர் பி.டி.ஓ., அலுவலக வளாகத்திற்கு மாற்றப்பட்டது. மீஞ்சூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் தொழிற்சாலைகளும், புதிய மின் நிலையங்களும் செயல்படுவதாலும், கடலோர பகுதியையொட்டி அமைந்துள்ளதாலும், அப்பகுதியில் விவசாயம் செய்பவர்களின் எண்ணிக்கை குறைவு. மீஞ்சூர் ஒன்றியத்தில் பெரும்பாலான விவசாயிகள் பொன்னேரியை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ளனர். பொன்னேரியில் செயல்பட்டு வந்த வேளாண்மை விரிவாக்கம் மையம் மூடப்பட்டதால், விவசாயிகள் உரிய ஆலோசனைகள் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். செயல்படாமல் கிடக்கும் வேளாண்மை விரிவாக்க மைய வளாகம் தற்போது புதர் மண்டிக் கிடக்கிறது. செம்மை நெல் சாகுபடி (ராஜராஜன் 1000) திட்டப் பணிகளுக்கான உபகரணங்கள் குப்பை போல் கொட்டப்பட்டு, துருப்பிடித்து வருகிறது. கட்டடமும் உரிய பராமரிப்பு இல்லாமல் பாழடைந்து வருகிறது. இது குறித்து, சின்னகாவணம் கிராமத்தை சேர்ந்த விவசாயி ரவி கூறுகையில், "விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனை வழங்கவும், பல லட்ச ரூபாய் கட்டடம் வீணாகி வருவதை தடுக்கவும், வேளாண்மை விரிவாக்க மையத்தை மீண்டும் அதே இடத்தில் இயக்க வேண்டும்' என்றார். இது குறித்து வேளாண்மை அதிகாரி ஒருவர் கூறுகையில், "தாலுகாவிற்கு ஒன்று என செயல்பட்ட வேளாண்மை மையங்கள் வட்டாரம் வாரியாக பிரிக்கப்பட்டது.

"இதனால், பொன்னேரி செயல்பட்ட விரிவாக்க மையம் சோழவரம் மற்றும் மீஞ்சூர் ஒன்றிய அலுவலக வளாகங்களில் செயல்பட்டு வருகிறது' என்றார்.

**பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்ய அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2011,01:18 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்ய விதை சான்று உதவி இயக்குனர் வெங்கடேசன் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:தர்மபுரி மாவட்டத்தில் தற்போது நல்ல மழை பெய்து வருகிறது. இதை பயன்படுத்தி பயறு வகை பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்ய முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். மத்திய, மாநில அரசும் பயறு வகை உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு பல வகை விவசாய நலத்திட்டங்களை செயல்படுத்தி பயறு வகை உற்பத்தியை அதிகப்படுத்த வேளாண் துறை முடுக்கி விட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான துவரையில் கோ 6 மற்றும் ஐ.சி.பி.எல் 85063 ரகத்தில் சுமார் 3.8 டன்னும், பாசிப்பயிறு கே.எம்.2, வி.பி.என் 2, வி.ஆர்.எம்., 1 ஆகிய ரகங்களில் 4.5 டன்னும், உளுந்து பயிரில் டி.எம்.வி 1., வி.பி.என் 3, வி.பி.என் 4, வி.பி.என் 5 ஆகிய ரகங்களில் 19.45 டன்னும் தட்ப பயிரில் பூசா 152, கோ 6 ஆகிய ரகங்களில் 38.7 டன்னும் மொத்தம் 66.45 மெட்ரிக் டன் பயறு வகை எல்லா வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுளளது. விவசாயிகள் இருப்பில் உள்ள பயிறு வகை ரகங்களை பல்வேறு மானியங்களில் பெற்று பயன் பெறலாம். விதைப்பண்ணை அமைத்து அதன் மூலம் கொள்முதல் செய்யும் சான்று பெற்ற விதைகளுக்கு உற்பத்தி மானியம் 10 ரூபாய் முதல் 15 ரூபாய் கிலோவுக்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், உணவு பாதுகாப்பு திட்டத்தில் வழங்கப்படுகிறது. செயல் விளக்க திடல் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. பயிர் பாதுகாப்பு கருவிகள் வாங்கவும், நீர் பாசனம் செய்ய பைப்லைன் மற்றும் சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் அமைக்க 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. நிலத்தை பயன்படுத்தும் கருவிகள் வாங்க மானியமும், பயிர்களுக்கு பயன்படுத்தப்படும் உரங்களுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இந்த திட்டங்களை பயன்படுத்தி விவசாயிகள் நடப்பு ஆண்டில் துவரை, உளுந்து, தட்டப்பயறு, கொள்ளு, பாசிப்பயறு மற்றும் கொண்டை கடலை ஆகிய பயறு வகைகளில் 689 ஹெக்டேரில் விதைப்பண்ணை பதிவு செய்து 151 மெட்ரிக் டன் சான்று பெற்று பயறு வகை விதைகள் கொள்முதல் செய்ய தேசிய வேளாண் வள்ச்சி திட்டம், தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் மற்றும் மாநில விதை பெருக்க திட்டம் மூலம் செய்ய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்தி பயறு வகை பயிர்களை சாகுபடி செய்யலாம். இதன் மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம். விவசாயிகள் விதைப்பண்ணைகளை அதிக அளவில் அமைக்க முன் வரவேண்டும்.

**எள் அறுவடை தொழில் நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2011,01:18 IST

தர்மபுரி: எள் அறுவடை தொழில் நுட்ப முறைகளை கையாள்வது மூலம் எள் விற்பனையின் போது, கூடுதல் லாபம் பெறலாம். தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம், பாப்பாரப்பட்டி, கோடிஅள்ளி, எஸ்.குள்ளாத்திரம்பட்டி, ரங்காபுரம், ஆதனூர், ஏரியூர், நெருப்பூர், பி.அக்ரஹாரம், கொட்டாவூர், ஊட்டமலை, பிலிகுண்டு, பாலக்கோடு, காரிமங்கலம், மொரப்பூர், நல்லம்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் எள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் இன்னும் சில நாட்களில் எள் அறுவடை பணிகள் துவங்க உள்ளது. எள் எண்ணெய் உபயோகம் நாளுக்கு, நாள் அதிகரித்து வரும் நிலையில் நல்ல தரமான எள் விதை உற்பத்தி செய்வது அவசியம். எள் விதைகளில் 51 முதல் 52 சதம் எண்ணெய் சத்து கிடைக்கிறது. தரமான எள் உற்பத்தி செய்வதால், கூடுதல் விலை, அதிக எண்ணெய் சத்து மற்றும் கசப்பு தன்மையற்ற எண்ணெய் கிடைக்க வாய்ப்புள்ளது. எள் அறுவடைக்கு பின் தொழில் நுட்பங்களை விவசாயிகள் கடைப்பிடித்து கூடுதல் வருவாய் பெறலாம். எள் பயிறு அறுவடையின் போது செடியின் கீழ் பகுதியில் உள்ள இலைகளில் 25 சதவீதம் இலைகள் உதிர்ந்தும் மேலே உள்ள இலைகள் மற்றும் தண்டு பகுதிகள் மஞ்சள் நிறமாக மாறியிருக்க வேண்டும். எள் காய்கள் பாதி அளவு மஞ்சள் நிறம் அடைந்து விட்டால் பயிர் அறுவடை செய்ய ஏற்ற பருவமாகும். எள் பயிரின் கீழ் பகுதியில் இருந்து 10வது காயை உடைத்து பார்த்தால், உள்ளே இருக்கும் விதைகள் கறுப்பு நிறமாக மாறியிருந்தால், அறுவடை செய்யலாம். (இது கறுப்பு எள் விதைக்கு மட்டும் பொருந்தும்) வெள்ளை எள் பயிருக்கு எள் விதை வெள்ளை நிறம் அடைய வேண்டும். இந்த நிலையை தாண்டி அறுவடை செய்தால் எள் காய்கள் வெடித்து விதைகள் சிதறி சேதம் அடையும். எள் பயிரை தரை மட்டத்தில் அறுத்து எடுக்க வேண்டும். செடியின் மேல் பகுதியை உள்புறமும், அடிப்பாகமும் வெளிப்புறமும் இருக்கும்படி வைத்து வட்ட வடிவாக, திறந்த வெளியில் அடுக்கி வைக்க வேண்டும். அடுக்கிய எள் செடியில் உள்ள காய்கள் ஒட்டு மொத்தமாக முதிர்ச்சி அடைய மேல் பகுதியில் வைக்கோல் போட்டு மூடி வைக்க வேண்டும். மூன்று நாட்கள் கழித்து எள் பயிரை எடுத்து களத்தில் காயப்பேட வேண்டும். மூன்று முதல் ஐந்து நாட்கள் காய வைத்து பின் விதைகளை தனியே பிரித்து எடுக்க வேண்டும். பிரிக்கப்பட்ட எள் விதையில் கலந்துள்ள கல், மண், இலை சருகுகள், சுருங்கிய, முதிராத விதைகள், பழுதுபட்ட விதைகள் ஆகியவற்றை தனியே பிரித்து எடுக்க வேண்டும். ஒரு லிட்டர் எள் விதையின் எடை 630 கிராம இருக்க வேண்டும். அப்போது தான் முதல் தரமான எள்ளாக இருக்கும். காய்ந்த எள் விதையின் ஈரப்பதம் ஐந்து முதல் ஒன்பது சதவீதத்துக்கு இருந்தால் தரமான எள் விதையாகும்.

திருந்திய நெல் சாகுபடி விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுரை

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2011,01:12 IST

ஓசூர்: "ஓசூர் தாலுகாவில் மானிய விலையில் நெல் விதைகளை பெற்று திருந்திய நெல் சாகுபடி முறைகளை பின்பற்றினால் கூடுதல் மகசூல் பெறலாம் ' என வேளாண் துறை உதவி இயக்குனர் நாகராஜ் தெரிவித்தார். அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நெல் சாகுபடியில் விவசாயிகள் பரவலாக ஈடுப்பட்டுள்ளனர். ஓசூர் தாலுகாவில் 1,200 ஹெக்டேரில் விவசாயிகள் நெல் சாகுபடியில் ஈடுப்பட்டுள்ளனர். கடந்த காலத்தில் விவசாயிகள் சாதாரண முறையில் விவசாயிகள் நெல் சாகுபடியில் ஈடுப்பட்டனர். தற்போது மூன்றாண்டு காலமாக விவசாயிகள் சாதாரண சாகுபடி முறையை தவிர்த்து திருந்திய நெல் சாகுபடி முறையை கையாண்டு அதிக மகசூல் பெற்று வருகின்றனர். இந்த திருந்திய நெல் சாகுபடியில் அனைத்து நவீன சாகுபடி முறைகளை கடைபிடித்து ஹெக்டேர் ஒன்றுக்கு 12,000 கிலோ வரை நெல் மகசூல் பெற்று உள்ளனர். இத்தொழில் நுட்பங்களை மேலும் கடைபிடிக்கவும், புதிய ரக நெல் சாகுபடியிலும் ஈடுபடவும் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 3 கிலோ நெல் விதைகள் போதுமானது. ஒரு ஏக்கருக்கு உண்டான விதையினை ஒரு சென்ட் மேட்டு நாற்றாங்கால் அமைத்து நாற்றுவிட்டு 14-17 நாட்களில் பறிக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 25 செ.மீ., நாற்றுக்கு நாற்று 25 செ.மீ., இடைவெளியில் குத்துக்கு ஒரு நாற்று வீதம் மேலாக நடவு செய்ய வேண்டும். நட்ட 15 நாள் முதல் 3-4 முறை 15 நாள் இடைவெளியில் கோனா வீடர் பயன்படுத்த வேண்டும். கேனா வீடர் பயன்படுத்துவதால் பழைய வேர்கள் அறுந்து புதிதாக அதிக வேர்கள் உண்டாகும் வாய்ப்புள்ளது. வேர் பகுதியில் நல்ல காற்றோட்டம் கிடைப்பது மூலம் அதிக தூர்கள் உருவாகும். உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்து போன்றவற்றை வேளாண்மை துறையினரின் சிபாரிசுபடி பயன்படுத்த வேண்டும். திருந்திய நெல் சாகுபடி செய்வதின் மூலம் நெல் பயிரில் பயிர் ஒன்றுக்கு 80 தூர்கள் வரை உருவாக்கி அதிக கதிர்கள் கிடைக்கிறது. கதிர்களும் அதிக எடை கொண்டதாக கிடைக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு 4,000 முதல் 5,000 கிலோ வரை நெல் மகசூல் கிடைக்கிறது. பருவத்திற்கு ஏற்றார்போல் ஏ.டி.டி., 39 வெள்ளை பொன்னி, ஐ.ஆர்., 64 போன்ற நெல் ரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டும். தற்போது நெல் சாகுபடிக்கு தேவையான நெல் விதைகள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த நெல்விதைகள் மானிய விலையில் வழங்க வேளாண் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. அதனால், விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற மானிய விலையில் நெல் விதைகளை பெற்று திருந்திய நெல் சாகுபடி முறையை கடை பிடிக்க வேண்டும். ஓசூர் பகுதியில் தென்மேற்கு பருவமழை பெய்ய துவங்கியுள்ளது. இதனால், நெல் சாகுபடிக்கு தேவையான நீர் ஆதாரத்திதற்கும் பிரச்சனை இல்லை.

**காடை வளர்ப்பு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2011,01:35 IST

கரூர்: கரூர் அருகே இறைச்சிக்கான காடை வளர்ப்பு பயிற்சி வரும் 10 ம் தேதி நடக்கிறது' என, இணைப்பேராசிரியர் செந்தில்வேல் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கரூர் அடுத்துள்ள பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் வரும் 10ம் தேதி இறைச்சிக்கான ஜப்பானிய காடை வளர்ப்பு பயிற்சி நடக்கிறது. இதில் காடை வளர்ப்பு, பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, நோய்கள் மற்றும் அவற்றை தடுக்கும் முறைள், விற்பனை உத்திகள் மற்றும் பண்ணை பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் நாளை (10ம் தேதி) காலை 10 மணிக்கு பயிற்சி மைய வளாகத்துக்கு வரவேண்டும். மேலும், 04324-294355 என்ற மொபைலிலும் தொடர்பு கொண்டு பெயரை முன்பதிவு செய்துக்கொள்ளலாம்.

**வெற்றிலை விலை திடீர் உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2011,01:35 IST

வேலாயுதம்பாளையம்: புகளூர் சுற்றுப்பகுதியில் விலையும் வெற்றிலைக்கு வைகாசி மாத சுபமுகூர்த்த சீஸன் ஆரம்பித்ததால், விலையேறியது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். வேலாயுதம்பாளையம், புகளூர் சுற்றுப்பகுதிகளான நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, நடையனூர், புங்கோடை, கோம்புப்பாளையம், நத்தமேடு, திருகாடுதுறை, கட்டிப்பாளையம், தவிட்டுப்பாளையம், புகளூர், செம்படாபாளையம், தோட்டக்குறிச்சி உள்ளிட்ட காவிரி கரையோர பகுதிகளில் புகளூர் பாசன வாய்க்கால் மூலம் 5,000க்கு மேற்பட்ட ஏக்கரில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் வெற்றிலை களிமண் மூலமாகவும், கிடங்கு வெட்டப்பட்டு 24 மணி நேரமும் தண்ணீர் சூழ்ந்த பகுதியில் விளைவதால் நீண்டநாள் பசுமை நிறம் மாறாமல் இருக்கும். காவிரி நீரின் தன்மையில் அதிக சுவையுடனும் பதப்படுத்தப்பட்ட பகுதிகளில் 15 நாட்களுக்கு மேல் வாடாமலும் அழுகி போகாமலும் இருப்பதால் இங்கு விளையும் வெற்றிலைகளுக்கு, உள்ளூர் மட்டுமின்றி வெளிமாநிலங்களிலும் நல்ல மவுசு உள்ளது. இதனால் தினசரி பஸ், வேன், ரயில் மூலம் ஈரோடு, திருப்பூர், கோவை உட்பட வெளிமாவட்டங்களிலும், கேரளா, ஆந்திரா, கர்நாடகா, குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, வெளிமாநிலங்களுக்கு கர்நாடகாவில் இருந்து வெற்றிலை குறைந்த விலைக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் மார்க்கெட்டில் மலிவு விலைக்கு போட்டி கொடுக்க

முடியாமல் புகளூர் வெற்றிலை, உள்ளூர் பகுதிகளில் பல்வேறு இடங்களில் விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் கடந்த ஒருவாரமாக வைகாசி மாதம் வளர்ப்பிறை சுபமுகூர்த்த தினங்கள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது. வெற்றிலையின் தேவை அதிகரித்துள்ளதுடன், வெளிமாநிலங்களிலும் சுப நிகழ்ச்சிகளுக்காக வெற்றிலை தேவை அதிகரித்துள்ளது. இதனால் புகளூர் சுற்றுப்புற காவிரி ஆற்றுப்படுகை வெற்றிலைக்கு மீண்டும் மவுசு ஏற்பட்டுள்ளது. புகளூர் பகுதிகளில் விளையும் இளங்கால், கற்பூரம், இளங்கால் பச்சைக்கொடி, பூங்கொலை, கற்பூர சக்கை, வெள்ளைமார் சக்கை ஆகிய வெற்றிலைக்கு அமோக வரவேற்பு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் 2,000 ரூபாய் முதல் 2,500 ரூபாய் விற்ற இளங்கால் கற்பூர ரகம் வெற்றிலை, தற்போது 3,000 ரூபாய் முதல் 3,500 ரூபாய் வரை தரத்துக்கு ஏற்ப விலை உயர்ந்துள்ளது. இளங்கால் பச்சைக்கொடி வெற்றிலை சென்ற வாரம் 3,000 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது 5,000 ரூபாய் வரை விலை ஏற்றமும், தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில்,"" அக்னி வெயிலில் வெற்றிலை காய்ந்து சருகு ஆகாமல் நல்ல பசுமை மாறாமல் உள்ளது. இதனால் வெளி மாவட்டம் முதல் வெளி மாநிலம் வரை அனைத்து பகுதியிலும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதேநிலை இந்த ஆண்டு முழுவதும் ஏற்பட்டால் விவசாயத்துக்கு வாங்கிய கடன் அடைப்பதுடன் விவசாயிகளின் வாழ்வும் செழிக்கும்," என்றனர்.

**கருப்பட்டி விலை தொடர்ந்து சரிவு உற்பத்தியாளர்கள் கடும் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2011,02:38 IST

கோபிசெட்டிபாளையம்: தென்னை கருப்பட்டி விலை திடீரென சரிவால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சென்ற வாரத்தை விட நடப்பு வாரம் கிலோவுக்கு 25 ரூபாய் வீழ்ச்சி அடைந்துள்ளது.
ஈரோடு மாவட்டம் கோபி பகுதிக்குட்பட்ட அயலூர், மல்லிபாளையம், நரிக்குட்டை, அலையபாளையம், சன்னகுழி, பாலபாளையம், கோசனம், தாழ்குளி, கொளப்பலூர், தீர்த்தாம்பாளையம், கெட்டிசெவியூர், நம்பியூர் மற்றும் குன்னத்தூர் பகுதிகளில் அதிகளவில் பனை மரங்கள் உள்ளன. பதனீரைக் காய்ச்சி கருப்பட்டி தயாரிக்கப்படுகிறது. கோபி சுற்று வட்டாரத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., வாய்க்கால் பாசனம் காரணமாக தென்னை மரங்கள் அதிகளவில் உள்ளதால் தென்னை கருப்பட்டி உற்பத்தி அதிகளவில் உள்ளது. பனை மற்றும் தென்னை கருப்பட்டி, சிறுவலூர் மற்றும் குன்னத்தூர் கூட்டுறவு கருப்பட்டி உற்பத்தியாளர் சங்கத்தில் விற்பனை செய்யப்படுகிறது. மே மாதம் 10 கிலோ பனை கருப்பட்டி 412 ரூபாய் விற்பனையானது. இவ்விலை தற்போது வரை தொடர்ந்து நீடிக்கிறது. தென்னை

கருப்பட்டி விலை மட்டும் படிப்படியாக குறைந்து கொண்டே செல்கிறது. மே கடைசியில் 10 கிலோ தென்னை கருப்பட்டி 350 ரூபாய்க்கு விற்பனையானது. சென்ற வாரம் 315 ரூபாயாக குறைந்தது. நடப்பு வாரம் 290 ரூபாயாக விலை வீழ்ச்சியடைந்தது.
சென்றாண்டு 10 கிலோ கொண்ட கருப்பட்டி 500 முதல் 600 ரூபாய் வரை விற்பனையானது. நடப்பாண்டு கருப்பட்டி விலை திடீரென வீழ்ச்சி அடைவது உற்பத்தியாளர்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.
குன்னத்தூர் சொசைட்டி மேலாளர் முருக,ஆனந்தம் கூறியதாவது: நடப்பு வாரத்தில் தென்னை கருப்பட்டி 8000 கிலோவும், பனை கருப்பட்டி 5,000 கிலோவும் வரத்தாகி உள்ளது. தென்னை கருப்பட்டி 10 கிலோ 290 ரூபாய். பனை கருப்பட்டி 10 கிலோ 412 ரூபாய்க்கும் விற்பனையானது. சமீபத்தில் பெய்த மழை காரணமாக தென்னை கருப்பட்டி கசிந்த நிலையில் உள்ளதால் வியாபாரிகள் வாங்க தயக்கம் காட்டுகின்றனர். இதன் காரணமாக தென்னை கருப்பட்டி விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## 2,650 டன் உரம் வருகை

பதிவு செய்த நாள் : ஜூன் 09,2011,02:38 IST

ஈரோடு: ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்காக 2,650 டன் டி.ஏ.பி., உரம், நேற்று வந்தது.
"தமிழகத்தில் நிலவும் உரத்தட்டுப்பாட்டை போக்கும் வகையில் அதிகளவில் உரம் ஒதுக்க வேண்டும்' என, மத்திய அரசுக்கு முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்திருந்தார். "ஈரோடு மாவட்டத்தில் உரத்தட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரினர்.
கலெக்டர் ஆனந்தகுமார், வேளாண் இணை இயக்குனர் அக்பர் ஆகியோர், வேளாண் அமைச்சர் செங்கோட்டையனிடம் உரத்தேவை குறித்து தெரிவித்தனர். அமைச்சர் உத்தரவுபடி, ஒரிஸா மாநிலம் பாரதீப்பில் இருந்து 2,650 டன் டி.ஏ.பி., உரம், 42 ரயில் பெட்டிகள் மூலம் ஈரோடு வந்தன. தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் சின்னசாமி, வேளாண் அலுவலர் சண்முகசுந்தரம், இஃப்கோ கள அலுவலர் மணிகண்டன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.
தமிழ்நாடு கூட்டுறவு உர விற்பனை இணைய மண்டல மேலாளர் மாதேஸ்வரன், முத்து ஆகியோர் உர மூட்டைகளை மாவட்டத்தில் உள்ள 150 தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்கு லாரிகளில் அனுப்பி வைத்தனர். அவர்கள் கூறியதாவது: எல்லா பயிருக்கும் அடியுரமாக டி.ஏ.பி., பயன்படுகிறது. தற்போது தடப்பன்பள்ளி, அரக்கன்கோட்டை பகுதிகளில் நெல் சாகுபடி துவங்கியுள்ளது. விரைவில் மஞ்சள், நிலக்கடலை சாகுபடியும் துவங்கவுள்ளது.

காவிரியாற்றில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், அனைத்து விவசாயிகளும் சாகுபடி பணியை துவக்கியுள்ளனர். அதற்கான உரத்தேவையை பூர்த்தி செய்ய வேளாண் அமைச்சர் செங்கோட்டையன் முயற்சியால், டி.ஏ.பி., உரம் 2,650 டன் வந்துள்ளது.
சில தினங்களுக்கு முன் பொட்டாஷ் உரம் 1,300 டன் வந்தது. கரும்புக்கு முக்கியமாக பயன்படும் காம்ப்ளக்ஸ் (20-20-20) உரம் 2,500 டன் வர உள்ளது. விவசாயிகள் தங்களுக்கு தேவையான உரத்தை தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**கொப்பரை கொள்முதல் விலையை உயர்த்த விவசாயிகள் வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,22:19 IST

பல்லடம் : "அரசு கொள்முதல் மையத்தில் ஒரு கிலோ கொப்பரை விலையை ரூ.70 ஆக உயர்த்த வேண்டும்,' என, பல்லடம், சுல்தான்பேட்டை வட்டார விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தென்னை விவசாயிகளை நசிவில் இருந்து காப்பாற்ற, கொப்பரைக்கு அரசு ஆதார விலை நிர்ணயம் செய்து, கொள்முதல் மையங்கள் அமைத்து கொள் முதல் செய்து வருகிறது. பல்லடம், பொள்ளாச்சி, உடுமலை, செஞ்சேரி உட்பட 10 கொப்பரை கொள்முதல் மையங்கள் உள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒரு கிலோ கொப்பரை ரூ.44.50க்கு மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. காங்கயம், வெள்ளகோவில் பகுதியில் உள்ள வெளிமார்க்கெட்டில் கொப்பரை கொள்முதல் விலை, அரசு மையங்களின் விலையை விட, கூடுதலாகவே உள்ளது. தற்போது, வெளிமார்க்கெட்டில் கிலோவுக்கு ரூ.21 கூடுதலாக உள்ளது. இதன் காரணமாக, வெளிமார்க்கெட்டிலேயே விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர். எனவே, அரசு கொப்பரை கொள்முதல் விலையை ரூ.44.50ல் இருந்து ரூ.70 ஆக உயர்த்தி வழங்க வேண்டும், மேலும், கெடுபிடிகளை தளர்த்த வேண் டும். இந்நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமே அரசு கொள்முதல் மையங்களுக்கு கொண்டு செல்வோம் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**விதைப்பண்ணையை மேம்படுத்த வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,22:19 IST

மடத்துக்குளம் : பாப்பன்குளம் அரசு விதைப்பண்ணையை மேம்படுத்தி விவசாயிகளுக்கு அனைத்து விதைகளையும் உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.கோவை மாவட்ட விவசாயிகளின் தேவைக்காக பாப்பன்குளத்தில் 43 ஏக்கர் பரப்பில் அரசு விதைப்பண்ணை அமைக்கப்பட்டது. இங்கு நெல் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. விதை உற்பத்திக்காகவும், மாதிரி பண்ணைகள் அமைக்கவும் வளாகத்தில் இருந்த 40 ஏக்கர் நிலம் பயன்பட்டு வந்தது. இந்நிலையில், கடந்த சில

ஆண்டுகளுக்கு முன்பு விதைப்பண்ணையில் அலுவலர் பணியிடம் காலியானது. இதனால், விதைப்பண்ணையின் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டன. இந்நிலையில், அரசு விதைப்பண்ணைக்கு சொந்தமான 23 ஏக்கர் நிலத்தை குளம் அமைக்க கையகப்படுத்த அரசு உத்தரவிட்டது. தற்போது, 20 ஏக்கர் நிலம் மட்டும் பண்ணை செயல்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. முடங்கி கிடந்த அரசு விதைப்பண்ணை தற்போது செயல்பட துவங்கினாலும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாமல் உள்ளன. பல ஆயிரம் ஏக்கராக நெல் சாகுபடி உள்ள நிலையில் போதுமான அளவு விதைகளை உற்பத்தி செய்ய கட்டமைப்பு வசதிகளை பெருக்க வேண்டும். நெல் மட்டுமல்லாமல் அனைத்து சாகுபடிக்கான விதைகளையும் உற்பத்தி செய்ய தேவையான தொழில்நுட்ப அலுவலர்களை விதைப்பண்ணைக்கு நியமிக்க வேண்டும். தேவையான விதைகளை வழங்க நடவடிக்கை எடுக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.வேளாண் அதிகாரிகள் கூறியதாவது: மடத்துக்குளம், ஆனைமலை உட்பட அனைத்து பகுதி விவசாயிகளுக்கும் குறுவை, சம்பா உட்பட பட்டங்களுக்கு தேவையான நெல் விதைகள் அரசு விதைப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகிறது.மழை மற்றும் பாசன திட்டங்களில் தண்ணீர் திறப்பை பொறுத்து விதைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. வளாகத்திலுள்ள 20 ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிடப்பட்டும், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல் தரமான விதைகளாக மாற்றப்படுகிறது என்றனர்.

**சின்னவெங்காயம் கொள்முதல் விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,22:19 IST

உடுமலை : வெளிமாநில வரத்து குறைந்துள்ளதால் சின்னவெங்காயத்தின் கொள்முதல் விலை அதிகரித்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் கிணற்றுப்பாசனத்திற்கு கடந்த சீசனில் 20 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக சின்னவெங்காயம் பயிரிடப்பட்டது. கடந்த சில நாட்களாக அறுவடை துவங்கி தீவிரமடைந்துள்ளது. இந்த சீசனில், கோடை வெயில் காரணமாக சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தண்ணீர் பற்றாக்குறை மற்றும் நோய் தாக்குதல் காரணமாக விளைச்சல் குறைந்துள்ளது. இந்நிலையில், சின்னவெங்காயத்திற்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தற்போது, விளைநிலத்திலேயே முதல் தர சின்னவெங்காயம் கிலோ 26 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. வியாபாரிகள் தரப்பில், கர்நாடகா மாநிலத்திலிருந்து கடந்த சில மாதங்களாக வெங்காய வரத்து குறைந்துள்ளது. இலங்கை மற்றும் மலேசியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் இருப்பதும் கொள்முதல் விலை அதிகரிக்க காரணமாகும். கர்நாடகா மாநிலம் மைசூரிலிருந்து விரைவில் வரத்து துவங்கும் வாய்ப்புள்ளதால் கொள்முதல் விலை குறையும்', என்றனர். விவசாயிகள் கூறுகையில், சின்னவெங்காய சாகுபடிக்கு செலவு பல

மடங்கு உயர்ந்துள்ளது. இடுபொருட்கள் விலை அதிகரித்துள்ளதுடன் அறுவடை பணிகளுக்கு போதிய ஆட்கள் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளோம். பருவமழை தீவிரமடையும் முன் அறுவடை பணிகளை முடிக்காவிட்டால் சின்னவெங்காயம் விளைநிலத்திலேயே அழுகி விடும்.இதனால், இரண்டு மடங்கு கூலி கொடுத்து அறுவடை பணிகளை மேற்கொண்டு வருகிறோம். சின்னவெங்காயத்தின் கொள்முதல் விலை கிலோவுக்கு 30 ரூபாயை தாண்டினால் மட்டுமே லாபம் கிடைக்கும்', என்றனர். ஆண்டியகவுண்டனூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் மட்டும் பல ஆயிரம் ஏக்கர் பரப்பில் சின்னவெங்காய சாகுபடிக்கு விளைநிலங்களை தயார்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

**நெல்பயிரில் குலைநோய் விவசாயிகள் கவனத்திற்கு**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,22:34 IST

பெரியகுளம் : பெரியகுளம் பகுதியில் நெல்பயிரில் குலைநோ யை கட்டுப்படுத்த சாகுபடிக்கு முன் நிலங்களில் மண் மாதிரிகள் எடுத்து உரமிட விவசாயத்துறை ஆலோசனை தெரிவித்துள்ளது. விவசாயத்துறை உதவி இயக்குனர் பெரியசாமி கூறியதாவது: கோடையில் ஏடிடி 45, ஏடிடி 39 நெல் ரகங்களில் ஆங்காங்கே குலைநோய் தாக்குதல் உள்ளது. நெற்பயிரில் இலைகள், கணுக்கள், கதிர்கள் ஆகியவற்றை தாக்கி சேதத்தை உண்டாக்கும். ஆரம்ப கட்டத்தில் நெல் பயிரின் இலைகளில் நீளமான கண்வடிவ புள்ளிகள் தோன்றும். நாளடைவில் இந்த புள்ளிகள் பெரிய புள்ளிகளாக மாறும். இந்நோய் பூஞ்சாணத்தினால் தோன்றுகிறது. காற்றின் மூலம் பரவக்கூடியது. சாகுபடிக்கு முன் நிலங்களில் மண் மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்து, ஆய்வின் முறைப்படி பயிர்களுக்கு உரமிட வேண்டும். நோயினை கட்டுப்படுத்த எடிபன்பாஸ் ஏக்கருக்கு 200 மி.லி., அல்லது டிரைØளோசோல் ஏக்கருக்கு 200 மி.லி., தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**பாதி பயிர் காப்பீடு தொகை கடலாடி விவசாயிகள் ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,22:43 IST

சாயல்குடி : பயிர் காப்பீடு தொகையில் பாதியளவே வழங்கப்பட்டதால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.
கடலாடி தாலுகாவில் 2,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் 2010ல் பயிர் காப்பீடு செய்தனர். தரிசு நிலங்கள் உள்ளவர்களும், நிலம் இல்லாதவர்களும் காப்பீடு செய்தனர். இதையறிந்த வேளாண்

அதிகாரிகள் உத்தரவுபடி, வி.ஏ.ஓ., வருவாய் ஆய்வாளர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டது. இக்குழு விசாரணை நடத்தியது. இவர்களின் அறிக்கைபடி, புதிதாக பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டது. இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஆப்பனூர், புனவாசல், சிக்கல், தரைக்குடி கூட்டுறவு சங்கங்களில் பணம் வழங்கப்பட்டு வருகிறது. பத்து ஏக்கருக்கு காப்பீடு செய்திருந்தவர்களுக்கு, ஐந்து அல்லது ஆறு ஏக்கருக்குத்தான் பணம் வந்தது. சிலருக்கு காப்பீடு தொகை வரவில்லை. இதனால் விவசாயிகள் பலர் ஏமாற்றமடைந்துள்ளனர். பிள்ளையார்குளத்தில் காசோலைகள் மட்டும் வழங்கப்பட்டு, பணம் பெற முடியாது சூழல் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உண்டான முழு தொகை வழங்க விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

**ஆரஞ்சு கிலோ ரூ.100 காய்கறி விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,22:51 IST

சிவகங்கை : காய்கறி வரத்து குறைந்துள்ளதால் சந்தையில் விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். சிவகங்கை வாரச்சந்தையில் காய்கறி விலை நிலவரம் (கிலோ): வெண்டைக்காய் -20; பாகற்காய்-20; 35க்கு விற்ற முருங்கை பீன்ஸ்-45; கேரட்-20; 16 க்கு விற்ற முள்ளங்கி-20; 15 க்கு விற்ற கத்தரிக்காய்-20; உருளை-15; 10 க்கு விற்ற முட்டை கோஸ்- 15; 10 க்கு விற்ற தக்காளி -15; கருணை கிழங்கு- 40; 40க்கு விற்ற இஞ்சி- 50; 30க்கு விற்ற அவரைக்காய்- 45; பட்டர் பீன்ஸ்-80; வெங்காயம்- 15; 20 க்கு விற்ற பெல்லாரி வெங்காயம்- 30; 15க்கு விற்ற காலிபிளவர்- 20; மாங்காய்-10; 30 க்கு விற்ற சேணை கிழங்கு- 40; சேம்பு- 30; பச்சை மிளகாய்- 16; 10 க்கு விற்ற பீட்ரூட்- 15; நூக்கல்-20; சோயா பீன்ஸ்- 60; 25க்கு விற்ற எலுமிச்சை- 40; பீர்க்கை- 20; டர்னிப்- 30; சீனி அவரை- 10; 15க்கு விற்ற சவ்சவ் -20; 30 க்கு விற்ற மல்லிஇலை- 25; கருவேப்பிலை- 20; பூசணி- 20க்கு விற்றன. பழங்கள்: கிலோ 100 ரூபாய் வரை விற்கப்பட்ட மாதுளம் பழம்- 50; அதில் 2 வது ரகம் -40; ஆப்பிள்-140; 2 வது ரகம் -120; 70 க்கு விற்ற ஆந்திர ஆரஞ்சு- 100; கொடைக்கானல் ஆரஞ்சு -60; சாத்துக்குடி-70; திராட்சை (வெள்ளை) -100; மஸ்கட் (கறுப்பு) -120; கறுப்பு (பன்னீர்) -40; அன்னாசி பழம்- 30; சப்போட்டா - 20; பாலாமனி மாம்பழம்- 20; சப்பட்டை 40; கல்லாமை மாம்பழம்-20 ரூபாய்க்கு விற்றது.

**பயிர் காப்பீட்டு திட்டத்தில் குளறுபடி புதிய முறையை பின்பற்ற கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,22:51 IST

சிவகங்கை : விவசாயிகளுக்கு பயிர்காப்பீட்டுத்திட்டத்தில் நிவாரணம் வழங்குவதில் புதிய முறையை பின்பற்ற வேண்டும் என விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர். தமிழக அரசு நெல், கரும்பு மற்றும் தானிய வகைகள் பயிரிடும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் மூலம் பயிர் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகளுக்கும், கடன் பெறா விவசாயிகளுக்கும் திட்டத்தின் மூலம் பயிர்களுக்கு இன்சூரன்ஸ் செய்து வெள்ளம் மற்றும் வறட்சி காலங்களில் ஏற்படும் நஷ்டத்திற்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. வேளாண்துறை, வருவாய்த்துறை மற்றும் புள்ளியியல் துறைகளின் மூலமாக மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட பாதிப்பை கணக்கில் வைத்து நடப்பாண்டிற்கான நிவாரணம் வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு வழங்கும் நிவாரணத்தில் குளறுபடி இருப்பதாக விவசாய சங்கங்கள் தெரிவிக்கின்றனர். விவசாய சங்க மாவட்ட செயலாளர் ஆதிமூலம் கூறுகையில்,""தமிழக அரசு பயிர் காப்பீட்டு திட்டத்தில் ஆரம்பத்தில் பிர்கா அளவில் வறட்சி கணக்கிடப்பட்டு வழங்கியதை, தற்போது யூனியன் அளவில் வழங்கி வருகிறது. ஒரு யூனியனில் ஒரு பகுதியில் நல்ல விளைச்சலும், ஒரு பகுதியில் மோசமான விளைச்சலும் இருக்கும். ஆனால் கணக்கெடுக்கும் அதிகாரிகள் ஏதாவது ஒரு பகுதியில் கணக்கெடுத்து இன்சூரன்ஸ் கம்பெனிகளுக்கு அனுப்புவதால் பிறபகுதி விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தால் உண்மையான விவசாயிகள் பயன் அடைவதில்லை. குளறுபடிகளை தவிர்க்க அண்டை மாநிலங்களில் வருவாய் கிராம அளவில் சேத மதிப்பீடு செய்வது போல் இங்கும் மதிப்பீடு செய்ய வேண்டும்." என்றார்.

**விலை வீழ்ச்சியால் பருத்தி விவசாயிகளுக்கு...இழப்பு : கொள்முதல் நிலையம் அமைத்தாலே தீர்வு**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,22:59 IST

ராஜபாளையம் : "பருத்தி விலை வீழ்ச்சியால் பாதிப்புக்குள்ளான விவசாயிகள் நலன் கருதி , அரசே கொள்முதல் நிலையங்கள் அமைக்கவேண்டும்,' என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். ராஜபாளையம் மற்றும் சுற்று கிராமங்களில் கோடைகால பருத்தி விவசாயம் பல ஏக்கரில் நடக்கிறது. இப்பணி துவங்கியபோது, குவிண்டாலுக்கு 6500 முதல் 8000 ரூபாய் விலை கிடைத்தது. இதனால் விவசாயிகள் இதில் ஆர்வம் செலுத்தினர். நல்ல விலை கிடைத்ததால், கூலி, உரம், பூச்சி விலை உயர்வை கூட கண்டுகொள்ளவில்லை. இந்நிலையில் ஹுதற்போது நூல்விலை

குறைந்து வருகிறது. இதை காரணமாக வைத்து மில்கள் உற்பத்தியை நிறுத்தம் செய்தன. இதனால் பருத்தி விலை குவிண்டாலுக்கு 2000 முதல் இரண்டு 1500 வரை குறைந்தது. இதனால் பருத்தி விவாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளனர்.வாங்கிய கடனை கூட அடைக்க முடியாத நிலையில் உள்ளனர். விவசாயிகள் சங்க தலைவர் என்.ஏ.ராமசந்திர ராஜா கூறுகையில், ""மில் வேலை நிறுத்தம், அரசின் கண்டுகொள்ளாத நிலையால் பருத்தி விலை வீழ்ச்சியில் உள்ளது. இது பருத்தி உற்பத்தியை பாதிக்கும். அடுத்த சீசனில் உற்பத்தி குறைந்து, இதன் தொடர்பு தொழிலில் பெரும் பாதிப்பு ஏற்படும். இதன் மூலம் பருத்தி இறக்குமதி செய்யும் நிலை கூட உருவாகலாம். இதை தடுக்க மத்திய, மாநில அரசுகள் கொள்முதல் நிலையம் அமைத்து, குவிண்டாலுக்கு ஆறு ஆயிரம் ரூபாய் விலை நிர்ணயிக்க வேண்டும்," என்றார்.


**தென்னை நல வாரிய உறுப்பினராக அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2011,22:59 IST

சிவகாசி : சிவகாசி தோட்டக்கலை உதவி இயக்குனர் செல்வம் கூறியதாவது: 50 சென்ட் இடத்தில் குறைந்த பட்சம் 35 தென்னை மரங்கள் வைத்துள்ள சாகுபடியாளர்கள் தென்னை நல வாரிய உறுப்பினர்களாக சேரலாம். நல வாரிய உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு மட்டுமே இனி வரும் காலங்களில் மானியம் வழங்கப்படும். உறுப்பினர்களாக சேர விரும்புவோர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் விண்ணப்ப படிவம் பெற்று பூர்த்தி செய்து வழங்கிட வேண்டும் ,என்றார்.

தினத் தந்தி

## இந்திய உணவு கழகத்தின் கோதுமை கொள்முதல் 2.60 கோடி டன்னாக உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு சந்தைப்படுத்துதல் பருவத்தில் (ஏப்ரல்–மார்ச்) இதுவரை இந்திய உணவுக் கழகம் 2.60 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்துள்ளது. கோதுமை கொள்முதல் இந்த அளவிற்கு அதிகரித்துள்ளது இதுவே முதல் முறையாகும். இது, கடந்த பருவத்தின் இதே காலத்தில் 2.54 கோடி டன்னாக இருந்தது.
உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும், அவற்றைச் சேமித்து வைப்பதற்கு போதிய அளவு வசதிகள் இல்லாததால் ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் மதிப்பிற்கு தானியங்கள் வீணாகின்றன. இதனால் ஏற்படும் இடர்பாடுகளை தவிர்க்கும் வகையில் வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ள குடும்பங்களுக்கு ரேஷன் கடைகள் மூலம் 50 லட்சம் டன் அரிசி மற்றும் கோதுமையை வழங்க மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது.
நடப்பு 2010–11 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) நம் நாட்டில் 23.59 கோடி டன் உணவு தானியங்கள் உற்பத்தியாகி உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் 2011 ஏப்ரல் 1–ந் தேதி நிலவரப்படி இந்திய உணவுக் கழகத்திடம் 3.20 கோடி டன் உணவு தானியங்களை சேமித்து வைக்கும் அளவிற்கு வசதி உள்ளதாக தெரிகிறது.



# வேளாண்மை செய்திகள்

விலை ஏற்றத்துக்கு வாய்ப்பு குறைவு:

## இருப்பு வைத்துள்ள பாசிப்பயறு, உளுந்தை உடனே விற்க வேண்டும்

### விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை

உலக அளவில் பயறு உற்பத்தி, இறக்குமதி மற்றும் நுகர்வில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. பயறு ஏற்றுமதி செய்யும் நாடுகள் அவற்றை சந்தை படுத்த இந்தியாவை நம்பி உள்ளன. நமது நாடு உலக அளவில் மிகப்பெரிய உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோராக இருந்தாலும், உற்பத்தி மற்றும் நுகர்வுக்கு இடையே 2 முதல் 3 மில்லியன் டன் இடைவெளி உள்ளது. இந்த இடைவெளி இறக்குமதியால் சமப்படுத்தப்படுகிறது. கடந்த 2010–11 ஆம் ஆண்டில் பயறு வகை உற்பத்திக்கான இலக்கு 16.5 மில்லியன் டன்களாகும்

இவ்வாறு உற்பத்தி ஆகும் பயறு வகை பயிர்களில் உளுந்து மற்றும் பாசிப்பயறு முக்கிய இடத்தை பிடித்து உள்ளது. இந்திய அரசின் முன் பயிர் கணக்கீட்டின்படி 2010–11 ஆம் ஆண்டில் உளுந்தின் உற்பத்தி 1.8 மில்லியன் டன்னும், பாசிப்பயிரின் உற்பத்தி 1.4 மில்லியன் டன்களாகும்.

**5 லட்சம் எக்டேரில்**

தமிழகத்தில் கடந்த 2009–10 ஆம் ஆண்டில் பயறுவகை பயிர்கள் 5.35 லட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு 2 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது. இதில் உளுந்து 2.60 லட்சம் எக்டேரிலும், பாசிப் பயறு 1.38 லட்சம் எக்டேர் நிலப்பரப்பிலும் பயிரிடப்பட்டு உள்ளது. இதில் உளுந்து .99 லட்சம் டன்னும், பாசிப்பயறு .48 லட்சம் டன்னும் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது.

இந்த பயிர்கள் தமிழ்நாட்டில் நாகபட்டினம், திருவாரூர், தூத்துக்குடி, கடலூர், தஞ்சாவூர், நெல்லை,, மற்றும் விழுப்புரம் ஆகியவையாகும். தமிழ்நாட்டில் சென்ற ஆண்டில் உளுந்தின் விலை கிலோவிற்கு ரூ.56 ஆகவும், பாசிப்பயறு விலை ரூ.62 ஆகவும் இருந்தது. தற்போது உளுந்து கிலோவிற்கு ரூ.48 ஆகவும், பாசிப்பயிரின் விலை ரூ.38 ஆகவும் உற்பத்தி அதிகரிப்பின் காரணமாக குறைந்து உள்ளது.

**சேமித்து வைத்துள்ள**

2011–12 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் இந்திய அரசு பயறு வகைகள் எண்ணெய்ப்பனை மற்றும் காய்கறிகள் பரப்பளவை அதிகரிக்க நிறைய வழிமுறைகளை அறிவித்து உள்ளது. இந்த நிலையில் இந்த இரண்டு பயிர்களின் பண்ணை விலை ஏறுவதற்கான வாய்ப்புகள் இருக்குமா என தெரிந்து கொள்ள விவசாயிகள் தெரிந்து கொள்ள விரும்புகின்றனர். ஏற்கனவே விற்பனை செய்தது போக சேமித்து வைத்து உள்ள உளுந்து மற்றும் பாசிப்பயிரினை உடனே விற்பனை செய்யலாமா அல்லது சிறிது காலம் சேமிப்பில் வைக்கலாமா என்று விவசாயிகள் கேட்கின்றனர்.

**விலை ஆய்வு**

இவர்களுக்கு விடை அளிக்கும் விதத்தில் கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த 10 ஆண்டுகளாக நிலவிய விலையை ஆய்வு செய்தது. ஆய்வு முடிவின் படி நடப்பு ஜூன் மற்றும் வருகிற ஜூலை மாதங்களில் உளுந்து கிலோ ஒன்றுக்கு விலையாக ரூ. 46 முதல் ரூ.48 ஆகவும், பாசிப்பயிறு கிலோ ஒன்றுக்கு விலையாக ரூ.41 முதல் ரூ.42 ஆக நிலவும் என்று கணித்து உள்ளது. விலை ஏற்றத்துக்கான வாய்ப்பு இல்லை. எனவே அறுவடை செய்து விற்பனை செய்தது போக சேமித்து வைத்து இருப்பில் உள்ள உளுந்து மற்றும் பாசிப்பயிரை உடனடியாக விற்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

## மண்ணை பொன்னாக்கும் மண்புழு உரம்

வேளாண்மை தொழிலில் தொழு உரங்களின் பற்றாக்குறையாலும், இயற்கை உரங்களை குறைந்த அளவே சேர்ப்பதாலும், மண் இறுகி பயிர் வளர்ச்சி குறைந்துவிடுகிறது. மண்புழு உரத்தில் மற்ற எல்லா உரங்களையும் விட அதிக முதன்மை சத்துக்களும், நுண்ணூட்ட சத்துக்களான துத்தநாகம், இரும்பு, மாங்கனீசு மற்றும் கந்தக சத்துக்கள் உள்ளன.

**மண்புழு உரம்**

இந்த சத்துக்களால் மண்ணின் கட்டமைப்பு சீரடைந்து, காற்றோட்டம் அதிகரித்து, நீர் உட்புகு திறன் 30 சதவீதம் அதிகரிக்கிறது. இயற்கை விவசாயத்தில் வெர்மிகம்போஸ்ட் என்று அழைக்கப்படும் மண்புழு உரம் பெரும் பயனை விவசாயிகளுக்கு அளிக்கிறது. இலை, தழைகளை உட்கொண்டு மண்புழு தரும் உரத்தின் பெயர்தான் மண்புழு உரம் ஆகும்.

மண்புழுக்கள் ஈரப்பதம் மிகுந்த மண், பூங்காக்கள், தோட்டங்களிலும் மற்றும் இலைகள் அதிக அளவில் உதிர்ந்து கிடக்கும் பகுதிகளிலும் காணப்படும். மண்புழுக்களின் சுவாசத்திற்கு தோல் ஈரப்பதம் மிகுந்ததாக இருக்க வேண்டியிருப்பதால் ஈரப்பாங்கான இடங்களிலேயே காணப்படும். இவை உதிர்ந்த இலைகள் மற்றும் இயற்கை சத்துக்கள் நிறைந்த மண்ணை உண்பதன் மூலம் தேவையான உணவை பெறுகின்றன.

**என்னென்ன சத்துக்கள்?**

மண்புழு விழுங்கிய மண், அதன் அரவைப்பையில் மாவாக்கப்பட்டு விடுகிறது. மேலும் மண்ணை தொடர்ச்சியாக தோண்டிக்கொண்டு இருப்பதாலும் மண் வளமானமாக மாறுகிறது. இதனால் பயிர்களுக்கு காற்று புகுவதற்கும், மண்ணில் ஈரப்பதம் நீடித்து இருப்பதற்கும், அதிகப்படியான நீர் எளிதில் வடிவதற்கும், வேர்கள் நன்கு வளர்வதற்கும் பயன் தருகிறது. இவை நைட்ரஜன் கலந்த கழிவு பொருட்களை வெளியேற்றுவதால் மண் வளமாகிறது. ஓராண்டில் சராசரியாக ஒரு சதுர மீட்டரில் 6 கிலோ கிராம் அளவு வளமான புதிய மண்ணை ஒவ்வொரு மண்புழுவும் குவிக்கிறது. இதன் கழிவில் 0.72 சதவீதம் தழைச்சத்து, 0.25 சதவீதம் மணிச்சத்து, 2.74 சதவீதம் சாம்பல் சத்து உள்ளது.

**பல்வேறு ரகங்கள்**

மண்புழுக்கள் ஜூலை முதல் அக்டோபர் மாதம் வரை இனப்பெருக்கம் செய்கின்றன. லாம்பிடோ மவுரிடி, கின் பெர்க், ஆக்டோக்டோனா, சொட்டா, கேட்ஸ் ஆகிய வகைகள் சாகுபடிக்கு ஏற்றவை. சாகுபடியின் போது மண் படுக்கையில் சுமார் 100 மண்புழுக்களை இட வேண்டும். அந்த இடம் எப்போதும் ஈரமாக இருக்கும் படி பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்காக தண்ணீர் தேங்கியோ, வழிந்தோடும் நிலையிலோ இருக்கக்கூடாது.

மண்புழு உரமிட்ட பின் அதன் மீது இலை, தழை சருகுகள் போட்டு தண்ணீர் ஊற்றி ஈரமாக வைத்துக்கொள்ள வேண்டும். தேவைப்பட்டால் பயிர்களின் மீது நீர் தெளிப்பான் மூலமாக பூச்சி மருந்து தெளிக்கலாம். எந்த காரணத்தை கொண்டும் நிலத்திற்கோ மண்புழு இருக்கும் உரக்குழிக்கு ரசாயன உரமோ அல்லது பூச்சி மருந்தோ தெளிக்க கூடாது.

**–தகவல்: அண்ணாதுரை, கதிரேசன், வேங்கடலெட்சுமி, வேளாண் கல்லூரி, திருச்சி.**

நிகர லாபமாக ரூ.50 ஆயிரம் கிடைக்க வாய்ப்பு:

## குறுவைபட்டத்தில் உயர்விளைச்சல் தரும் வீரிய ஒட்டுரக நெல் பயிரிட ஆலோசனை

கோவை, ஜூன்.9–

நிலர லாபமாக ரூ.50 ஆயிரம் கிடைக்க வாய்ப்பு உள்ளதால் குறுவை பட்டத்தில் உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டுரக நெல்லை பயிர் செய்யவேண்டும் என்று விவசாயிகளுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்து உள்ளது.

இது தொடர்பாக கோவை வேளாண் பல்கலைக்கழக நெல் துறை தலைவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

**வீரிய ஒட்டுரக நெல்**

கோவை வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் கடந்த 2006–ஆம் ஆண்டு கோ.ஆர்.எச்–3 என்ற வீரிய ஒட்டுரக நெல் வெளியிடப்பட்டது. இது கார் மற்றும் குறுவை சாகுபடிக்கு ஏற்றதாகும். இந்த பருவங்களில் தமிழகத்தில் உள்ள காவிரி டெல்டா, தாமிரபரணி மற்றும் பெரியார் வைகை பகுதிகளில் 5 லட்சம் எக்டேரில் பயிர் செய்யப்படுகிறது.

இந்த நெல்லை பயிர் செய்வதால் உயர் விளைச்சல் ரகங்களை விட அதிக மகசூல் தரக்கூடியது. உலர் நிலம் மற்றும் குளிரை தாங்கி வளரும் தன்மை கொண்ட இந்த ரகம் குலைநோய் மற்றும் துங்குரோ நோயை எதிர்த்து வளரும் தன்மை கொண்டதாகும். சாயாத மற்றும் அறுவடையின் போது மழையால் பாதிக்கப்படாத தன்மை கொண்ட இந்த ரகம் தனியார் வீரிய ஒட்டு ரக நெல்லுக்கு சமமான விலை கொண்டதாகும். மேலும் மற்ற ரகங்களை விட நெல்லில் விலை அதிகமாக உள்ளதால் விவசாயிகள் சாகுபடி செலவை குறைக்க குறைந்த விலை அளவாக எக்டேருக்கு 15 கிலோ பயன்படுத்தலாம்.

**விதை நேர்த்தி**

இதற்கு தேவையான நெல்லை 12 முதல் 15 மணி நேரம் நீரில் நன்கு ஊறவைத்து பிறகு முளை கட்ட வேண்டும். முளை கட்டிய விதையை கார்பெண்டாசின் என்ற பூஞ்சாணக் கொல்லியை பயன்படுத்தி விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

நன்கு தூர் கட்டிய 20 முதல் 25 நாட்கள் உடைய நாற்றுக்களை சாதாரண நடவு முறையில் 20–க்கு 15 சென்டிமீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். இவ்வாறு நட்ட நெல்லுக்கு பரிந்துரை செய்யப்படும் உர மேலாண்மைபடி 10 முதல் 15 டன் தொழு உரம், 120 முதல் 150 கிலோ தழைச்சத்து, 40 முதல் 60 கிலோ சாம்பல் சத்து மற்றும் 40 முதல் 60 கிலோ மணிச்சத்து இட வேண்டும். நுண்ணூட்ட உரமான துத்தநாக சல்பேட் எக்டேருக்கு 25 கிலோ இட வேண்டும். மேலும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் பொருளாதார சேத நிலையத் தாண்டும் போது ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கடைப்பிடிக்க வேண்டும்.

**நன்கு முதிர்ச்சி அடைந்து**

இந்த ரக வீரிய ஒட்டுரக நெல் 115 நாட்களில் முதிர்ச்சி அடைந்து சராசரியாக எக்டேருக்கு 7,500 கிலோ விளைச்சல் கொடுக்க வல்லது. அதிநவீன தொழில்நுட்ப முறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் சராசரியாக எக்டேருக்கு 10 டன் பெறலாம்.

சாதகமான பயிர் வளர்ப்பு சூழலில் இந்த வீரிய ஒட்டுரக நெல்லை பயிர் செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு நிகர லாபமாக ரூ.50 ஆயிரம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இந்த வீரிய ஒட்டுரக நெல் கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் விற்பனைக்கு உள்ளது. ஒரு கிலோ விதை நெல்லின் விலை ரூ.150 ஆகும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,690–2,740

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை
4,150–4,250

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
8,700–00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,500–00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரிஉள்பட) 1,917–00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1 குவிண்டால்(வரிஉள்பட) 8,000–00
டின் (15 கிலோ) 1,700–00

**விளக்கெண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரிஉள்பட)
10,700.00
15 கிலோ டின் (வரிஉள்பட) 1,850–00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ
டின் (வரிஉள்பட) 1,170.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,495.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட) 1,115.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 572–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஜூன்.8–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 6,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 5,400 | 58.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,500 | 38.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (ஆவரை) | ரூ. 5000 | 52.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஜூன்.8–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 6,468
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 9280
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 12,323
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 10,545
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 12,373
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 12,935
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 19,122

## கோவை உழவர் சந்தை

கோவை,ஜூன்.8–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

| காய்கறிகள் | | | (கிலோவுக்கு) | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 60–00 | காலிப்பிளவர் | ரூ. | 15–20 |
| கத்தரிக்காய் | ரூ. | 10–16 | பொறியல் தட்டை | ரூ. | 18–16 |
| வெண்டைக்காய் | ரூ. | 16–20 | பச்சை மொச்சை | ரூ. | 30–00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 10–9 | தேங்காய் | ரூ. | 10–14 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 10–11 | பட்டாணி | ரூ. | 90–00 |
| புடலை | ரூ. | 8–14 | பூண்டு | ரூ. | 90–00 |
| பீர்க்கான்காய் | ரூ. | 20–24 | கறிவேப்பிலை | ரூ. | 12–10 |
| சுரைக்காய் | ரூ. | 10–12 | அகத்தி | ரூ. | 16–00 |
| பாகற்காய் | ரூ. | 18–20 | வாழைக்காய் | ரூ. | 20–00 |
| கொத்தவரை | ரூ. | 10–12 | குடைமிளகாய் | ரூ. | 38–00 |
| பூசணிக்காய் | ரூ. | 10–12 | சாதா பீன்ஸ் | ரூ. | 38–40 |
| அரசாணிக்காய் | ரூ. | 5–6 | டபுள்பீன்ஸ் | ரூ. | 50–00 |
| மேராக்காய் | ரூ. | 18–20 | கறிபீன்ஸ் | ரூ. | 54–00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 11–12 | புஸ்பீன்ஸ் | ரூ. | 54–00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 25–26 | காளான் | ரூ. | 80–140 |
| சின்னவெங்காயம் | ரூ. | 30–32 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11–13 |
| பெரியவெங்காயம் | ரூ. | 11–00 | மாங்காய் | ரூ. | 8–10 |
| இஞ்சி | ரூ. | 32–00 | திராட்சை | ரூ. | 32–00 |
| முருங்கைக்காய் | ரூ. | 38–40 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 18–00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 20–24 | கொய்யா1கிலோ | ரூ. | 28–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 24–00 | மாதுளை1கிலோ | ரூ. | 45–90 |
| கருணைகிழங்கு | ரூ. | 28–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15–00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | வரமிளகாய் | ரூ. | 80–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14–15 | மாம்பழம் | ரூ. | 25–50 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14–00 | ஆப்பிள் | ரூ. | 115–130 |
| சிறுகிழங்கு | ரூ. | 30–00 | சாத்துக்குடி | ரூ. | 45–00 |
| முள்ளங்கி | ரூ. | 15–18 | நெல்லிக்காய் | ரூ. | 36–40 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 22–23 | ஆரஞ்சு | ரூ. | 75–00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 10–18 | வெள்ளரி | ரூ. | 10–12–26 |
| நூல்கோல் | ரூ. | 28–00 | புளி 1 கிலோ | ரூ. | 75–00 |
| கொத்தமல்லி | ரூ. | 24–25 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 36–00 |
| ட்ரின்பீன்ஸ் | ரூ. | 28–00 | அவரை | ரூ. | 28–30 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–12 | நிலக்கடலை | ரூ. | 35–00 |
| கலர்கோஸ் | ரூ. | 12–00 | மக்காச்சோளம் | ரூ. | 12–18 |
| புதினா | ரூ. | 16–00 | தர்பூசணி | ரூ. | 14–00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 25300 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 25,800 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 26,800 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 11,300 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 11000 |
| சுக்கு(புதியது) | ரூ. 14000 |
| சுக்கு(பழையது) | ரூ. 12000 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 9950 |
| கொப்பரை நாடன் | ரூ. 6725 |
| கொப்பரை ராசு | ரூ. 6625 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6875 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 7600 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7000 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 22400 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 22580 |
| ரப்பர் பால் | ரூ. 14100 |
| காப்பி | ரூ. 10800 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3200 |
| நேந்திரகாய் | ரூ. 1250 |
| இஞ்சி | ரூ. 900 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஜூன்.8–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,545 | 100.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1140 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1200 | 77.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1040 | ——— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1140 | 71.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1650 | 110.00 |
| என்.கே.எஸ்பிராண்ட் | ரூ. 1,850 | 125.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,070 | 61.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,450 | 96.00 |
| வனஸ்பதி | | |
| வில்வி பட்ஸ் பிராண்ட் | ரூ. 1,240 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1060 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,060 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,060 | – |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.161.00 | அதிகபட்சவிலை | ரூ.253.00 |
| சராசரி விலை | ரூ.141.96 | சராசரி விலை | ரூ.232.20 |
| குறைந்தபட்சவிலை | ரூ.111.00 | குறைந்தபட்சவிலை | ரூ.182.00 |

**பட்டு நூல் ரூ.1,482**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,816.00 | 16,816.00 | 16880.00 |
| ஒரு கிராம் | 2,102.00 | 2,102.00 | 2110.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 55,455.00 | 58,250.00 | 59,000.00 |
| ஒரு கிராம் | 58.25 | 58.25 | 59.00 |